# சைவ சமயம்

## பரீட்சைத் துணை நூல்

### பாகம் - 2

## ஆண்டு 11



க. பொ. த. சாதாரண தரம் <G. C. E. O/L>


வேலுப்பிள்ளை உமாமகேஸ்வரன்
சேவைக்காலப் பயிற்சி ஆசிரிய ஆலோசகர்
தொலைக்கல்வி ஆசிரிய பயிற்சி நெறிப்
பகுதிநேரப் போதனாசிரியர்
தர்மாச்சாரியார்



வெளியீடு:
சக்தி நூல் நிலையம்,
53, திருகோணமலை வீதி.
மட்டக்களப்பு.


## எங்கள் சைவப் பாரம்பரியம்

1. ஈழத்தில் தென்கோடியில் தெய்வந்துறையில் அமைந்திருந்த ஈச்சரம் எது?

   சந்திரசேகரம்.

2. ஈழத்தில் தேவாரம் பாடப்பட்ட ஆலயங்கள் யாவை?

   திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம்.

3. ஜயவர்த்தனபுரக் கோட்டைக்கு வெளியே இருந்த ஆலயம் பற்றிக் கூறும் நூல் எது?

   ஸலலி ஹினி ஸந்தேஸ.

4. ஆலயங்கள்தோறும் படித்துப் பயன் சொல்லப்படும் புராணம் எது?

   கந்தபுராணம்.

5. பெரும்பாலான ஆலயங்களில் எத்தனை நாட்கள் திருவிழா நடைபெறுகின்றது?

   பத்து நாட்கள்.

6. இலங்கையில் இருபத்தைந்து நாட்கள் திருவிழா நடைபெறும் ஆலயங்கள் எவை?

   மாவிட்டபுரம், நல்லூர்.

7. இலங்கையில் ஐந்து தேர்கள் உள்ள ஆலயங்கள் எவை?

   பாத்தளை முத்துமாரியம்மன், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்.

8. கொடித்தம்பம் இல்லாத கோயில்களில் நடைபெறும் விழா எது?

   அலங்காரத் திருவிழா.

9. மலையகத்தில் தீபாவளி தினத்தன்று இடம்பெறும் விழாக்கள் எவை?

   நரகாசூரவதமும், திருமால் வழிபாடும்.

10. அந்தணர் அல்லாதோர் மந்திரம் சொல்லாது வாயைத் துணியால் கட்டிக்கொண்டு பூசை செய்யும் ஆலயங்கள் எவை?

    கதிர்காமம், செல்வச்சந்நிதி, மண்டூர்.



RangaRakes Tamilnavarasam.com

11. இலங்கையை சிவபூமி என்று அழைத்தவர் யார்?

திருமூலர்.

12. இலங்கையில் அமைந்துள்ள நான்கு ஈச்சரங்களும் எவை?

திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம், முன்னேச்சரம், நகுலேச்சரம்.

13. ஈழத்திலே உள்ள ஆலயங்களை வகைப்படுத்துக?

சிவன் கோயில், அம்மன் கோயில், முருகன் கோயில், பிள்ளையார் கோயில், விஷ்ணு கோயில்.

14. ஈழத்தில் கிராமியக் கடவுளர் வரிசையில் இடம்பெறுவோர் யார்?

வைரவர், விரபத்திரர், ஐயனார், கண்ணகி, நாச்சிமார், சீதையம்மன்.

15. ஆலயங்களில் வருடாந்த திருவிழாக்களைவிட வேறு எவை நடைபெறுகின்றன?

சிவராத்திரி, நவராத்திரி, கந்தசஷ்டி போன்ற விரதங்கள், தீபாவளி, தைப்பொங்கல், புதுவருடப் பிறப்பு போன்றவையும், யமசங்காரம், சூரசம்காரம் போன்றவையும் நடைபெறுகின்றன.

## சிவாலயங்கள்

16. குனித்த புருவமும் எனும் தேவாரத்தைப் பாடியவர் யார்?

நாவுக்கரசர்.

17. ஆனந்தவடிவில் காட்சியளிக்கும் இறைவனின் வடிவம் எது?

நடராஜர் வடிவம்.

18. மன்னாருக்கு சமீபத்திலுள்ள மாதோட்டத்தில் அமைந்துள்ள ஆலயம் எது?

திருக்கேதீச்சரம்.

19. பண்டு நால்வருக்கறமுரைத் தருளி எனும் பாடலைப் பாடியவர் யார்?

திருஞானசம்பந்தர்



20. சம்பந்தராலும், சுந்தரராலும் பாடப்பட்ட ஆலயம் எது?

திருக்கேதீச்சரம்.

21. திருகேதீச்சரத்தைப் பற்றி சிறப்பாகக் கூறும் நூல் எது?

தட்சிண கைலாய மான்மியம்.

22. சோழர் ஆட்சிக்காலத்தில் திருக்கேதீச்சரம் என்ன பெயரால் அழைக்கப்பட்டது?

ராஜராஜேஸ்வர மகாதேவன் கோயில்.

23. மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக தமிழ் வேதமாகிய தேவார திருவுருவில் மட்டும் மறைந்திருந்த இறைவன் யார்?

திருக்கேதீஸ்வரப் பெருமான்.

24. அங்கம்மொழி அன்னாரவர் எனும் பாடலைப் பாடியவர் யார்?

சுந்தரர்.

25. திருக்கேதீஸ்வர ஆலய இறைவியின் பெயர் என்ன?

கௌரி அம்மை.

26. திருக்கேதீஸ்வர ஆலய தீர்த்தத்தின் பெயர் என்ன?

பாலாவி.

27. நாகநாதன் எனப் போற்றப்படும் இறைவன் யார்?

திருக்கேதீஸ்வரர்.

28. திருக்கேதீச்சரத்தில் அமைந்துள்ள மடங்கள் எவை?

திருஞானசம்பந்தர் மடம், சுந்தரர் மடம், திருவாசக மடம் நாவலர் மடம், சிவராத்திரி மடம்.

29. திருக்கேதீஸ்வர ஆலயத்திலுள்ள சிறப்புக்கள் எவை?

வானுறவோங்கிய ராஜகோபுரம், வண்ணக்கலையின் எழில் கொஞ்சும் சிற்ப வேலைப்பாடுகள், ஆனந்த நடனமாடும் அற்புத மயில்களின் அழகுக் கோலங்கள்.

30. நிரைகழலரவம் எனும் தேவாரத்தைப் பாடியவர் யார்?

சம்பந்தர்.

31. சம்பந்தர் திருக்கோணேஸ்வர இறைவனை எங்கிருந்து நினைத்துப் பாடினார்?

இராமேஸ்வரத்திலிருந்து.



RangaRakes Tamilnavarasam.com

32. இந்நகரில் அமர்ந்தங்கண் எனும் பாடலைப் பாடியவர் யார்?

சேக்கிழார்.

33. தேவாரங்கள், தட்சண கைலாய புராணம், திருகோணமலைப் புராணம் முதலியன ஏற்றிப்பாடும் இறைவன் யார்?

திருக்கோணேஸ்வரர்.

34. ஈழத்திருநாட்டின் புராதன ஈச்சரம் எது?

திருக்கோணேஸ்வரம்.

35. பாவநாச தீர்த்தத்தைக் கட்டிய சோழ இளவரசன் யார்?

குளக்கோட்டன்.

36. கோணேசர் ஆலயம் அழிக்கப்பட்டபோது சில விக்கிரகங்களைக் காப்பாற்றி தம்பலகாமத்தில் கோயில் கட்டிய அரசன் யார்?

இரண்டாம் இராஜசிங்கன்.

37. கோணேசர் ஆலயத்தில் எப்போது திருவிழா நடைபெறும்?

பங்குனி உத்தரத்தில் ஆரம்பித்து பதினெட்டு நாட்கள் நடைபெறும்.

38. திருக்கோணேஸ்வர ஆலய இறைவியின் பெயர் என்ன?

மாதுமையாள்.

39. திருக்கோணேஸ்வர ஆலயத்தை நினைத்து தேவாரம் பாடியவர் யார்?

திருஞானசம்பந்தர்.

40. திருக்கோணேஸ்வர ஆலயத்துக்கு ஆதரவளித்த அரசர்கள் யார்?

சோழர்கள், பல்லவர்கள், பாண்டியர்கள், யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவத்திகள்.

41. திருக்கோணேஸ்வர ஆலயத்தில் இடம்பெறும் விசேட உற்சவங்கள் எவை?

சிவராத்திரி, மாசிமகம், ஆனி உத்தரம், மார்கழி திருவாதிரை.

42. காலத்தால் முந்திய ஈச்சரம் எது?

முன்னேச்சரம்.



43. அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான அளகேச்சரம் எனப்போற்றப்படும் ஆலயம் எது?

முன்னேச்சரம்.

44. அந்நியரால் நிலைகுலைந்த முன்னேச்சர ஆலயத்தைப் புனரமைத்தவன் யார்?

கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்.

45. முன்னேச்சரத்தில் அமைந்துள்ள சிறப்புக்கள் எவை?

பிரமாண்டமான கர்ப்பக்கிரகம், தூபி.

46. முன்னேச்சரத்தில் எத்தனை காலப் பூசைகள் நடைபெறுகின்றன?

ஆறு காலப் பூசைகள்.

47. முன்னேச்சர ஆலயத் திருவிழா எப்போது நடக்கின்றது?

ஆவணிமாதப் பௌர்ணமியை தீர்த்த நாளாகக்கொண்டு இருபத்தி ஏழு நாட்கள்.

48. முன்னேச்சர ஆலயத் திருவிழாக்களில் சிறப்பானவை எவை?

இறுதி ஆறு நாட்கள்.

49. சிவனடியார் திருவிழா என்பது என்ன?

பக்தோற்சவம் எனும் விழா.

50. சிவராத்திரிக்கு திருக்கேதீச்சரம் போல நவராத்திரிக்குப் புகழ் பெறும் ஆலயம் எது?

முன்னேச்சரம்.

51. முன்னேச்சர ஆலய இறைவியின் பெயர் என்ன?

வடிவாம்பிகை.

52. முன்னேச்சரத்தில் நடைபெறும் வருடாந்த உற்சவத்தில் சிறப்பான விழாக்கள் எவை?

பக்தோற்சவம் எனப்படும் சிவனடியார் திருவிழா, பிசாடணோற்சவம், வேட்டைத்திருவிழா, தேர்த் திருவிழா தீர்த்தத் திருவிழா.

53. முன்னேச்சர ஆலய சூழலில் அமைந்துள்ள ஆலயங்கள் எவை?

தென்கிழக்குத் திசையிலே விநாயகர் ஆலயம், மூன்றாம் வீதியின் வடமேற்கு மூலையில் ஐயனார் கோயில், தேரோடும் வீதியின் வடக்குத் திசையிலே காளிகோயில், கோயிலின் புறத்தே களத்தப் பிள்ளையார் ஆலயம்.



RangaRakes

Tamilnavarasam.com

54. கீரிமலைக் கரையினிலே அமைந்துள்ள ஆலயம் எது?

நகுலேச்சரம்.

55. நகுலேச்சர ஆலயம் எதற்கு சிறப்புப் பெற்றது?

பிதிர்க்கடன் தீர்ப்பதற்கு.

56. நகுலேச்சர ஆலய இறைவியின் பெயர் என்ன?

நகுலாம்பிகை.

57. நகுலேச்சர ஆலய தீர்த்தம் எப்போது நடைபெறுகின்றது?

சிவராத்திரியன்று.

58. தலை நகரில் கலையழகு பொலிய விளங்கும் ஆலயம் எது?

பொன்னம்பலவாணேச்சரம்.

59. நகுலேச்சர ஆலய சூழலில் அமைந்துள்ள ஆலயங்கள் எவை?

கடற்கரைப் பிள்ளையார் கோயில், மாரியம்மன் கோயில், காசி விசுவநாதன் கோயில், கதிரையாண்டவர் கோயில்.

60. ஒட்டுசுட்டான் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் வேட்டைத் திருவிழா எவ்வாறு நடைபெறுகின்றது?

வேடராக வருவதாக நேர்த்திக்கடன் வைத்தவர்கள் உடலெங்கும் கரிபூசி, வாகைத் தளிர்களாலான உடை அணிந்து, ஓலையால் தொப்பியுமணிந்து, வேட்டைத் திருவிழாவில் பங்குகொள்கின்றனர். ஒவ்வொருவர் கையிலும் நுனியிற் குழை கட்டப்பட்ட தடியொன்று காணப்படும். வேட்டுவத் தலைவன் சுரைக் குடுவையில் தேன் வைத்திருக்கின்றான், தலைவனின் ஆணைக்கு ஏனையோர் கட்டுப்பட்டவர்கள். வேட்டை முடிந்து திரும்பும்போது இறைவனுக்கும் உமைக்கும் வாக்குவாதம் இடம்பெறுகின்றது. இவர்களின் பிணக்கினை மணியக்காரர் தீர்த்து வைக்கின்றார். சுவாமி ஆலயத்தினுள் பிரவேசித்ததும் வேடுவர்கள் ஒருவர்பின் ஒருவராக அணிவகுத்து தலைவனின் ஆணையின்பின் விழுந்து வணங்கி, கோயிலை வலம் வந்து, தம் வேடுவ உடைகளைக் களைந்து குளத்திலே நீராடுகின்றனர்.

61. கொக்கட்டிச்சோலையில் வருடாந்த உற்சவத்தை விட வேறு என்ன விழாக்கள் நடைபெறுகின்றன?

தைப்பொங்கல், தைப்பூசம், மாசிமகம், சித்திரைச்சித்திரை திருக்கார்த்திகை, மார்கழித் திருவாதிரை எனும் விசேட விழாக்களும், சிவராத்திரி, கந்தசஷ்டி, விநாயக சஷ்டி போன்ற விரதங்களும்.



62. இலங்கையில் தான்தோன்றீச்சரர் ஆலயங்கள் அமைந்துள்ள இடங்கள் எவை?

கொக்கட்டிச்சோலை, ஒட்டுசுட்டான்.

63. ஆலயத்திலுள்ள மூலஸ்தானமூர்த்தி தானாகவே சுயம்புலிங்கமாய் தோன்றுவது எவ்வாறு அழைக்கப்படும்?

தான்தோன்றீச்சரர்.

64. வன்னி மன்னர்களின் ஆதரவுடன் பொலிவுடன் விளங்கிய ஆலயம் எது?

ஒட்டுசுட்டான் தான்தோன்றீச்சரர்.

65. ஒட்டுசுட்டான் ஆலயத்தில் எத்தனை காலப் பூசை நடக்கின்றது?

மூன்று காலப்பூசை.

66. ஒட்டுசுட்டான் ஆலயத்திருவிழா எப்போது நடைபெறுகின்றது?

ஆனிமாத அமாவாசையில் கொடியேறி பௌர்ணமியில் தீர்த்தம் நடைபெறுகிறது.

67. ஒட்டுசுட்டான் ஆலய விழாக்களில் சிறப்பானது எது?

வேட்டைத்திருவிழா.

68. ஒட்டுசுட்டான் ஆலய இறைவி யார்?

தேவி பூலோகநாயகி.

69. மட்டக்களப்புப் பகுதியில் ஒரேயொரு சிவன் கோயில் எனப் பெருமையினையுடைய ஆலயம் எது?

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரர் ஆலயம்.

70. கொக்கட்டிச்சோலை ஆலய கோயில் பரிபாலகரை எவ்வாறு அழைப்பர்?

வண்ணக்கர்.

71. கொக்கட்டிச்சோலை ஆலய வண்ணக்கர், குருக்கள், தொண்டூழியக் காரர் ஆகியோர் எவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றனர்?

தாய்வழி உரிமையாக மருமக்கள் வழியில்.

72. கொக்கட்டிச்சோலை ஆலய மகோற்சவம் எப்போது நடைபெறுகின்றது?

ஆவணி மாதத்திலே வரும் முதற் பிறையிலே கொடியேறி அதை அடுத்துவரும் பூரணைக்கடுத்த தினங்களில் தீர்த்தம்



RangaRakes
Tamilnavarasam.com

73. மட்டக்களப்புப் பகுதியில் ஓரே தேரோடும் கோயில் என்ற சிறப்பினைப் பெறும் ஆலயம் எது?

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம்.

74. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் நடை பெறும் திருவேட்டையின் தத்துவம் என்ன?

ஆன்ம ஈடேற்றத்துக்குத் தடையாக இருக்கும் மலங்களை இறைவன் அழித்தல்.

75. கொக்கட்டிச்சோலை ஆலய வரலாற்றைக் கூறும் நூல் எது?

மட்டக்களப்பு மான்மியம்.

## அம்மன் கோயில்கள்

76. தனம் தரும் கல்வி தரும் எனும் பாடலைப் பாடியவர் யார்?

அபிராமிப்பட்டர்.

77. அம்பாளின் அருள் விழாக்களுள் சிறப்பானது எது?

நவராத்திரி.

78. ஈழத்தின் புராதன அம்மன் ஆலயம் என்றதும் எம் நினைவுக்கு வரும் ஆலயம் எது?

நயினை நாகபூசணி அம்மன் ஆலயம்.

79. அறுபத்துநான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடம் எனப் போற்றப்படும் ஆலயம் எது?

நயினை நாகபூசணி அம்மன்.

80. ஆதியில் நயினை நாகபூசணி அம்மன் எவ்வாறு அழைக்கப்பட்டாள்?

மணித்தீவுப் புவனேஸ்வரி.

81. நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் எத்தனை காலப் பூசை நடைபெறுகின்றது?

ஆறுகால பூசை.

82. நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் ஈடு இணையற்ற பொருள் எது?

சித்திரத் தேர்.

83. நயினை நாகபூசணி அம்மன் தீர்த்தம் எப்போது நடைபெறுகிறது?

ஆனிமாதப் பௌர்ணமியில்.

84. நயினை நாகபூசணி அம்மன் ஆலய விழாக்களுள் சிறப்பானது எது?

நவராத்திரிகால ஸ்ரீ சக்கர பூசை.

85. குழந்தை வரம் வேண்டி நேர்க்கடன் வைக்கும் ஆலயங்களுள் சிறப்பானது எது?

நயினை நாகபூசணி அம்மன்.

86. மலையகத்தில் விளங்கும் அம்மன் ஆலயம் எது?

மாத்தளை முத்துமாரியம்மன்.

87. மாத்தளை முத்துமாரியம்மன் தேரை யார் இழுத்துச்செல்வர்?

அன்னையர்.

88. வடக்கே அமைந்துள்ள சிறப்பான அம்மன் ஆலயம் எது?

தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயம்.

89. திருகோணமலையில் அமைந்துள்ள அம்மன் ஆலயம் எது?

நகரக் காளி கோயில்.

90. நல்லூரில் அமைந்துள்ள அம்மன் ஆலயம் எது?

வீரமாகாளி அம்மன் ஆலயம்.

91. இலங்கையில் சிறந்து விளங்கும் அம்மன் ஆலயங்கள் எவை?

நயினை நாகபூசணி அம்மன் ஆலயம், மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம், திருமலை நகரக்காளி, நல்லூரில் அமைந்துள்ள வீரமாகாளி போன்றவை.

92. சிவநெறி தழைத்தோங்கும் எங்கள் சிவபூமியில் அன்னையை எவ்வெப் பெயர்களில் போற்றுகின்றோம்?

மனோன்மணி, மகேஸ்வரி, உமாதேவி, மாகாளி, தேவி.

93. கிராமங்களில் எவ்வெவ் வடிவங்களில் அம்பாள் போற்றப் படுகின்றாள்?

முத்துமாரியம்மன், துர்க்காதேவி, வீரமாகாளி.

94. அந்நியரால் அழிக்கப்பட்ட புராதன தேவி ஆலயங்கள் எவை?

புத்தளப் பகுதியிலுள்ள காரைதீவுக் கோயில், கற்பிட்டியில் இருந்த நாச்சியம்மன் கோயில், நீர்கொழும்பு மீனாட்சி ஒடையிலிருந்த மீனாட்சியம்மன் ஆலயம், பெருந்தோட்டக் காளி கோயில் போன்றன.



RangaRakes Tamilnavarasam.com

## பிள்ளையார் கோயில்கள்

95. 'பாலுந் தெளி தேனும்' எனும் பாடலைப் பாடியவர் யார்?
ஔவையார்.

96. ஆற்றங்கரைகளிலும், குளக்கரைகளிலும், மருத மரத்தடியிலும், அரச மரத்தடியிலும் இருந்து ஞான ஆட்சி புரிபவர் யார்?
பிள்ளையார்.

97. நல்லூர் வெயிலுகந்தப் பிள்ளையார் கோயிலைக் கட்டிய அரசன் யார்?
இலங்கைப் பரராசசேகரன்.

98. கருணாகரத் தொண்டமானால் உரும்பராயில் அமைக்கப்பட்ட கோயில் எது?
கருணாகரப் பிள்ளையார் கோயில்

99. நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயிலைக் கட்டியவன் யார்?
அரசகேசரி.

100. கண்ணனைக் கோதிக் காக்கைப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ள இடம் எது?
சுழிபுரம்.

101. வடக்கே கீரிமலை போன்று கிழக்கே ஆடி அமாவாசை அன்று பிதிர்கடன் தீர்க்கும் ஆலயம் எது?
மாமாங்கப் பிள்ளையார் ஆலயம்.

102. பிள்ளையாரின் விருப்பமான நிவேதனம் எது?
மோதகம்.

103. மாமாங்கப் பிள்ளையார் ஆலய தீர்த்தக்கேணியை அரச உதவியுடன் கட்டிமுடித்தவர் யார்?
அமரர் ராஜன் செல்வநாயகம்.

104. ஈழத்தில் சிறந்து விளங்கும் பிள்ளையார் கோயில்கள் எவை?
நல்லூரிலே விளங்கும் வெயிலுகந்த பிள்ளையார் கோயில், உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயில், நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோயில், சுழிபுரம் கண்ணனைக் கோதிக் காக்கைப் பிள்ளையார் கோயில், மானிப்பாய் மருதடி வினாயகர் ஆலயம், மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் கோயில்.



105. மாமாங்கப் பிள்ளையார் ஆலய அமைப்பினை விபரிக்க?
அமைதியான சூழலில் அகன்ற வீதிகளுடன் அழகுடன் காட்சியளிக்கின்றது. அவற்றினைச் சூழ்ந்த மடாலயங்கள் ஆலயத்தின் அருகே அழகிய தீர்த்தக்கேணி.

106. மகோற்சவச் சிறப்போ மாபெரும் கோயில் அமைப்புக்களோ இல்லாமல் மகிமைபெற்று விளங்கும் விநாயகர் ஆலயங்கள் எவை?
முறுகண்டிப் பிள்ளையார் கோயில், பருத்தித்துறை தில்லையம்பலப் பிள்ளையார் கோயில்.

## முருகன் கோயில்கள்

107. சைவத்தின் உயிர் நாடியாய், எங்கள் கலாச்சாரத்தின் ஆதாரமாய் விளங்குவது எது?
கந்தபுராணம்.

108. இறவாமற் பிறவாமல் எனும் திருப்புகழைப் பாடியவர் யார்?
அருணகிரிநாதர்.

109. மாணிக்ககங்கைக் கரையில் அமைந்திருக்கும் ஆலயம் எது?
கதிர்காமம்.

110. கதிர்காமத் திருவிழா எப்போது நடைபெறுகின்றது?
ஆடி அல்லது ஆவணி மாதம்.

111. மூலஸ்தானத்தில் விக்கிரகம் இல்லாத ஆலயம் எது?
கதிர்காமம்.

112. கதிர்காமத்தில் பூசை செய்பவர்கள் யார்?
கப்புறாளை.

113. கதிர்காம உற்சவத்தையொட்டி தலைநகரில் நடைபெறும் விழா எது?
ஆடிவேல் விழா.

114. கிழக்கில் சின்னக் கதிர்காமம் என்று போற்றப்படும் ஆலயம் எது?
மண்டூர்.



RangaRakes Tamilnavarasam.com

115. மண்டூரில் பூசை செய்பவர் யார்?
கப்பூகர்.

116. கதிர்காமத்தைப்போன்று வடக்கே மௌன பூசை நடைபெறும் ஆலயம் எது?
செல்வச் சந்நிதி.

117. எங்கள் கலாச்சாரத்தின் ஆதார வேர்கள் எவை?
கந்தசஷ்டி விரதம், கந்தபுராணப் படனம்.

118. தொண்டமானாற்றங்கரையிலே விளங்கும் ஆலயம் எது?
செல்வச்சந்நிதி.

119. அன்னதான முருகன் என அழைக்கப்படுபவர் யார்?
செல்வச்சந்நிதி முருகன்.

120. நல்லூர் திருவிழா எப்போது ஆரம்பமாகிறது?
ஆடி அமாவாசையிலிருந்து ஆறாம் நாள்.

121. அபிஷேகக் கந்தன் என்று போற்றப்படுபவர் யார்?
நல்லூர்க் கந்தன்.

122. நல்லூர்க் கந்தன் ஆலயத் திருப்பணிகளை மேற்கொண்ட அரசன் யார்?
புவனேகபாகு.

123. நல்லூரில் எத்தனை நாட்கள் திருவிழா நடைபெறுகின்றது?
இருபத்தைந்து நாட்கள்.

124. மாவிட்டபுரத்துக்கு சிறப்பாக அமைந்தது எது?
வானுற ஓங்கிய எழிற்கோபுரம்.

125. மாவிட்டபுரத் திருவிழா எப்போது ஆரம்பமாகின்றது?
ஆனி மாத பூர்வ சஷ்டியில்.

126. மாவிட்டபுர ஆலயத் தீர்த்தம் நடைபெறும் இடம் எது?
கீரிமலை.

127. மாவிட்டபுரத்தில் எத்தனை நாட்கள் திருவிழா நடைபெறுகின்றது?
இருபத்தைந்து நாட்கள்.



128. குமாரபுரம் எங்கே அமைந்துள்ளது?
முல்லைத்தீவு மாவட்டத்தில்.

129. குமாரபுரத்து ஆலயம் அந்நியரால் அழிக்கப்படலாம் என்ற அச்சத்தில் விக்கிரகங்கள் எங்கே மறைத்து வைக்கப்பட்டன?
பருத்தித்துறையில் இருக்கும் கந்தவனத்தில்.

130. மண்டூர் கந்தசுவாமி கோயிலில் பூசை செய்பவர் யார்?
கற்பூகர்.

131. செல்வச்சந்நிதி ஆலய பூசகர் யாருடைய பரம்பரையில் இருந்து தெரிவுசெய்யப்படுகிறார்?
மருதர் கதிர்காமர் எனும் பெயர்கொண்ட முருகபக்தர்.

132. கதிர்காமத்தில் நடைபெறும் நான்கு திருவிழாக்களும் எவை?
சித்திரைப் புத்தாண்டில் நடைபெறும் முதலாம் திருவிழா, விசேட உற்சவத்தின் முன்னோடியாக வள்ளியம்மையை மணமுடித்தற்கெனக் கன்னிக்கால் நாட்டும் விழா, இரண்டாம் திருவிழா, ஆடி அல்லது ஆவணியிலே பதினைந்து நாட்கள் நிகழும் மகோற்சவம் மூன்றாந் திருவிழா, திருக் கார்த்திகை விளக்கீடு நான்காம் திருவிழா.

133. நல்லூரில் நடைபெறும் வருடாந்த உற்சவத்தில் சிறப்பானவை எவை?
திருக்கார்த்திகை விழா, கைலாசவாகன விழா, தண்டாயுத பாணி உற்சவமான மாம்பழத் திருவிழா, தேர்த் திரு விழா, தீர்த்தத் திருவிழா.

134. கோயில் கடவையில் அடங்கும் மூன்று இடங்களும் எவை?
காங்கேயனின் விக்கிரகம் வந்திறங்கிய காங்கேசன்துறை, நகுலேச்சரப் பெருமான் விளங்கும் தீர்த்தத்தலமான கீரி மலை, கந்தனின் ஆலயம் அமைந்த மாவிட்டபுரம்.

135. அறுபத்தைந்து ஆலம் இலைகளில் உணவு படைத்து வழிபடும் ஆலயம் எது?
செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்.

136. செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் பூசை முடிந்ததும் பூசகர்களால் கொடுக்கப்படும் மூன்று பிரசாதங்களும் எவை?
தீர்த்தம், திருநீறு, மருந்து.



RangaRakes
Tamilnavarasam.com

137. செல்வச்சந்நிதி ஆலயத்தில் கொடுக்கப்படும் பிரசாதங்களும் மருந்து என்பது என்ன?

முருகனுக்குப் படைத்த உணவில் ஒரு பகுதி.

## திருமால் கோயில்கள்

138. பச்சைமா மலைபோல் மேனி எனும் பாடலைப் பாடியவர் யார்?

தொண்டரடிப் பொடியாழ்வார்.

139. சைவ சமயம் வளர நாயன்மார் உதவியதுபோல் வைஷ்ணவம் வளர உதவியவர்கள் யார்?

ஆழ்வார்கள்.

140. நல்லாரைக் காக்கவும், பொல்லாரை அழிக்கவும், அறத்தை நிலைநாட்டவும் நான் யுகம்தோறும் தோன்றுகின்றேன் என்று கூறியவர் யார்?

கண்ணன்.

141. காத்தற் கடவுள் யார்?

விஷ்ணு.

142. விஷ்ணு ஆலயங்களில் சிறப்பாகக் கொண்டாடப்படுவது எது?

கிருஷ்ண ஜயந்தி விழா.

143. வல்லிபுர ஆழ்வார் மூலத்தானத்தில் உள்ள சக்கரம் எவ்வாறு கிடைத்தது?

சமுத்திர அலைகளின் வழியே.

144. இலங்கையில் சிறந்து விளங்கும் விஷ்ணு ஆலயங்கள் எவை?

வல்லிபுரம் விஷ்ணு ஆலயம், பொன்னாலை விஷ்ணு ஆலயம், வண்ணார்பண்ணை பெருமாள் கோயில், காங்கேயன்துறைக்கும் கீரிமலைக்கும் இடையிலே கடற்கரையோரத்தில் உள்ள கிருஷ்ணன் கோயில்.

145. வண்ணார்பண்ணையில் யாழ்ப்பாணத்து அரசர்களினால் அமைக்கப்பெற்ற ஆலயம் எது?

பெருமாள் கோயில்.



## வைரவர் வழிபாடு

146. "புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்" எனும் பாடலில் வரும் வடுகன் யார்?

வைரவர்.

147. கிராமங்கள்தோறும் காவற்கடவுளாக விளங்குபவர் யார்?

வைரவர்.

148. பிள்ளையாரைப்போல ஆற்றங்கரைகளிலும், மரவடிகளிலும் அமர்ந்திருந்து அருள்பவர் யார்?

வைரவர்.

149. அந்நியர் ஆண்ட வேளையில் இல்லங்களில் இரகசியமாக எதனை வைத்து வணங்கினர்?

வைரவர் சூலம்.

150. பொங்கி, மடை பரவி, வடை மாலையும் சாத்தி வணங்கப்படுபவர் யார்?

வைரவர்.

151. அந்நியர் ஆட்சிக்காலத்தில் எங்கள் தெய்வ உணர்வினைக் காத்துநின்ற வைரவர் வழிபாடு எவ்வாறு கிராமியக் கலைகளுக்கு உயர்வு தந்தன?

வைரவர் வழிபாடு நடக்கும் நாள் இரவு வேளைகளில் கரகமும், காவடியும், காத்தவராயன் கூத்துக்களும், வசந்தன் நாடகங்களும், வைரவப் பெருமான் முன்னிலையில் விடிய விடிய நடந்தன. உடுக்கும், பறையும் பூசையின் நேரத்தில் ஓங்கி ஒலித்தன. எனவே கிராமியக் கலைகள் மேற்படி நிகழ்ச்சிகள்மூலம் வளர்ச்சியடைந்தன.

## எங்கள் ஞானியர்

152. தமிழ் நாட்டில் சிறந்து விளங்கிய ஞானியர் யார்?

திருமூலர், சிவவாக்கியர், பட்டினத்தார், பாம்பாட்டிச் சித்தர், அகப்போய்ச் சித்தர், குதம்பைச் சித்தர்.

153. எங்கள் நாட்டில் சிறந்து விளங்கிய ஞானியர் யார்?

கடையிற் சுவாமி, செல்லப்பா சுவாமி, குழந்தைவேல் சுவாமி, யோகர் சுவாமி.



RangaRakes Tamilnavarasam.com

154. ஞானியரின் இயல்புபற்றி சிவஞான சித்தியார் கூறுவது என்ன?

ஞானியர்களுக்கு நன்மை தீமைகளாகிய இரு வினைகளும் இல்லை. அவர்கள் வினைகளைச் செய்தால் அவற்றின் பயனை நாடுவதும் இல்லை; தவங்கள் செய்ய வேண்டிய தில்லை; சமயத்திற்கேற்ற வேடங்கள் தேவையில்லை; புலனும் கரணமும் இல்லை; குணமும் குறியும் இல்லை; இவர்கள் பாலரையும், பயித்தியக்காரரையும், பேய்பிடித் தவர்களையும்போல ஆடல் பாடல் செய்வதும் உண்டு.

155. ஞானியரின் நிலை எவ்வாறிருக்கும்?

விருப்பு, வெறுப்பு, இன்பம், துன்பம், புகழ்ச்சி, இகழ்ச்சி இத்தகைய நிலைகளுக்கு அப்பாற்பட்ட நிலையே ஞானி யரின் நிலை.

156. இலங்கையிலே ஞான பரம்பரைக்கு வித்திட்டவர் யார்?

கடையிற்சுவாமி.

157. "குவலயத்தின் விழிபோன்ற..." எனும் பாடல் மூலம் யாழ்ப் பாணத்து சுவாமியின் புகழைப் பாடியவர் யார்?

பாரதியார்.

158. மலைநாட்டில் குயின்ஸ்பரித் தோட்டத்தில் வாழ்ந்த சித்தர் யார்?

நவநாதசித்தர்.

159. கதிர்காமத்தில் வாழ்ந்த ஞானி யார்?

முத்துலிங்க சுவாமிகள்.

160. மட்டக்களப்பில் காரைதீவில் சமாதியடைந்த ஞானி யார்?

சித்தானைக்குட்டிச் சுவாமியர்.

161. கடையிற் சுவாமியின் தீட்ஷா நாமம் எது?

சுவாமி முத்தியானந்தர்.

162. கடையிற் சுவாமியின் குரு யார்?

ஸ்ரீ நரசிம்ம பாரதி.

163. கடையிற் சுவாமியின் தோற்றத்தை விபரிக்க?

விசாலமான தோள்கள், நீண்ட கைகள், நுனியில் வளைந்த மூக்கு, எப்போதும் முகத்தில் ஒரு புன்னகை, நகைச்சுவையாகப் பேசுதல், அவருடைய கக்கத்துள் என்றும் ஒரு குடை இருக்கும்.



164. கடையிற் சுவாமி எப்போது சமாதியடைந்தார்?

1882ம் ஆண்டு புரட்டாதி மாதம்.

165. கடையிற் சுவாமியின் சமாதி எங்கே அமைந்துள்ளது?

வண்ணார்பண்ணை நீராவியடியில்.

166. கடையிற் சுவாமியின் உத்தம சீடர் யார்?

செல்லப்பா சுவாமிகள்.

167. கடையிற் சுவாமியின் மற்றொரு சீடர் யார்?

குழந்தைவேல் சுவாமிகள்.

168. செல்லப்பா சுவாமியார் அதிகமாக எங்கே காணப்படுவார்?

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தேரடியில்.

169. செல்லப்பா சுவாமியின் மகா வாக்கியங்கள் எவை?

எல்லாம் செப்படி வித்தை, அப்படியே உள்ளது, ஒரு பொல்லாப்பும் இல்லை, முழுவதும் உண்மை, ஒருவருக் கும் தெரியாது, யார் அறிவார்?

170. செல்லப்பா சுவாமியின் மாணாக்கர் யார்?

யோகர் சுவாமி.

171. யோகர் சுவாமியின் இளமைப் பெயர் என்ன?

சதாசிவன்.

172. செல்லப்பா சுவாமிகள் யோகர் சுவாமிக்கு உபதேசித்த நான்கு மகா வாக்கியங்களும் எவை?

"முழுவதும் உண்மை" "எப்பொழுதோ முடிந்த காரியம்" "ஒரு பொல்லாப்புமில்லை" "நாம் அறியோம்"

173. நற்சிந்தனை என்னும் நூலின் ஆசிரியர் யார்?

யோகர் சுவாமி.

174. யோகர் சுவாமியின் உபதேசங்கள் எவை?

தருமநெறியிற் பிசகாதே; எவ்வுயிரும் எம் பெருமான் திரு முன்னிலை என்று சாதனை செய்; கடவுள் உள்ளும் புறமும் உள்ளவர்; நான் உனக்குத் தரக்கூடிய முது சொம், எந்நேரமும் கடவுள் உன்னுடன் இருக்கிறார் என்னும் உறுதிமொழியே.



RangaRakes Tamilnavarasam.com

175. யோகர் சுவாமிகள் தம் அடியார்களின் நன்மைகருதி தொடக்கி வைத்த மாத இதழ் எது?

சிவதொண்டன்.

176. யோகர் சுவாமி தம் அடியார்களின் நன்மை கருதி தொடக்கி வைத்த சிவ தொண்டன் நிலையங்கள் எங்கெங்கு அமைந்துள்ளன?

செங்கலடி, யாழ்ப்பாணம்.

177. தேசாதிபதி சோல்பரிப் பிரபுவின் மகன் யாருக்குச் சீடராக இருந்தார்?

யோகர் சுவாமிக்கு.

178. யோகர் சுவாமிகள் சிவனடி சேர்ந்த நாள் எது?

1964ம் ஆண்டு பங்குனி மாதம் 23ம் திகதி.

## அறுவகைச் சமயங்கள்

179. இந்திய நாட்டிலே தொன்றுதொட்டு வழங்கிவரும் வைதிக சமயங்கள் ஆறும் எவை?

சைவம், வைஸ்ணவம், சாக்தம், காணத்தியம், சௌரம். கௌமாரம்.

180. சைவத்தமிழ் நூல்களுள்ளே காலத்தால் முற்பட்டது எது?

திருமந்திரம்.

181. அறுவகைச் சமயம் எனும் வழக்கு யாரால் தோற்றுவிக்கப் பட்டது?

திருமூலரால்.

182. ஆதி சங்கரர் பிறந்த இடம் எது?

மலையாள நாட்டிலே உள்ள காலடி எனும் ஊரில்.

183. வைதிக சமயத்தை மீள நிறுவியவர் யார்?

ஆதி சங்கரர்.

184. ஆதி சங்கரர் எங்கெங்கே மடங்களை அமைத்தார்?

காஞ்சி, சிருங்கேரி, பூரி, துவாரகை, பத்திரிநாதம்.

185. அத்துவித தாபகர் என்று சமயவாதிகளால் அழைக்கப்பட்டவர் யார்?

சங்கரர்.

186. அறுவகைச் சமயங்களையும் மீள நிறுவியவர் என்பதால் சங்கரர் பெறும் பெயர் என்ன?

சண்மதப் பிரதித்தாபகர்.

187. அறுவகைச் சமயங்களுள் இன்று வரை நிலைத்து நிற்கும் இரு சமயங்களும் எவை?

சைவம், வைஷ்ணவம்.

## சைவம்

188. சிந்துவெளியில் இடைத்த புதுமைகளுள் முதலிடம் பெறத்தக்கது எது?

சைவத்தின் பழமை.

189. சைவத்திற்கு ஆதாரமான வடமொழி நூல்கள் எவை?

வேதத்தின் ஞானகாண்டமும், சிவாகமங்களும்.

190. சிவனுடைய இரு நிலைகளும் எவை?

சொரூபநிலை, தடத்த நிலை.

191. உருவத்திருமேனி கொள்ளும் மகேஸ்வரனுக்குரிய வடிவங்கள் எத்தனை?

25.

192. சிவலிங்கம் எந்த வடிவத்தைச் சேர்ந்தது?

சதாசிவ வடிவத்தைச் சேர்ந்தது.

193. இலிங்க வடிவத்தில் உள்ள ஒன்பது திருமேனிகளும் எவை?

சிவம், சக்தி, நாதம், விந்து (அருவத் திருமேனிகள்) மகேஸ்வரன், உருத்திரன், பிரமா, விஷ்ணு (உருவத்திரு மேனிகள்) சதாசிவம் (அருவுருவத்திருமேனி).

## வைஷ்ணவம்

194. அண்டசராசரங்களுக்கெல்லாம் முழுமுதற் கடவுள் விஷ்ணு என்று கூறுபவர் யார்?

வைஷ்ணவர்.



RangaRakes

Tamilnavarasam.com

195. விஷ்ணு என்னும் சொல்லின் பொருளென்ன?
எங்கும் நிறைந்தவர்.

196. பழந்தமிழர் மாயோன் என்றும், திருமால் என்றும் வழிபட்ட தெய்வத்தை வைதிகர் எவ்வாறு அழைத்தனர்?
விஷ்ணு.

197. வைணவர்கள் நெற்றியில் எதை அணிந்துகொள்வர்?
வெண்குறியும், செங்குறியுமாக நாமம் (திருமன்) இட்டுக் கொள்வர்.

198. மிகப் பழமைவாய்ந்த வைகாசன ஆகமங்கள் கூறுபவை எவை?
விஷ்ணுவின் பல்வேறு மூர்த்தங்களையும் விரிவாகக் கூறுகின்றன.

199. ''நாலாயிரம் பிரபந்தம்'' பாடியவர் யார்?
பன்னிரு ஆழ்வார்கள்.

200. விஷ்ணுவினுடைய மூவகை தோற்றங்களும் எவை?
அவதாரம், ஆவேசம், அமிசம்.

201. அவதாரம் (விஷ்ணு ஏதாவது ஒரு உருவத்தில் அவதரிப்பது) ஆவேசம் (தம் சக்தியில் ஓரளவைக் கொடுத்தல்) அமிசம் (அவருடைய ஆயுதங்களான சங்கு, சக்கரம் முதலியவற்றை பிறவி எடுக்குமாறு பணித்தல்.)

202. மும்மூர்த்திகள் யார்?
பிரமா, விஷ்ணு, உருத்திரன்.

203. வைணவத்தையும் சைவத்தையும் இணைக்கும் வடிவம் எது?
அரிகர வடிவம்.

204. அரிகர வடிவம் மகேஸ்வரனுடைய 25 மூர்த்தங்களுள் எதுவாகக் கொள்ளப்படுகின்றது?
அரியத்தர்.

## சாக்தம்

205. சத்தியையே தாம் வணங்கும் ஒரே தெய்வமாகக் கொண்டவர்கள் யார்?
சாக்தர்.



206. சாக்தேயம், வாவம் என அழைக்கப்படும் சமயம் எது?
சாக்தம்.

207. ''சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்'' என்றதும் எமது நினைவிற்கு வரும் இறைவடிவம் எது?
அர்த்த நாரீஸ்வரர்.

208. இறைவன் சாந்தமாக இருக்க உலகம் முழுவதையும் இயக்குவது எது?
சக்தி.

209. பெண் தெய்வங்களுக்குச் சிறப்பாக கோயில்கள் எடுக்கப்பட்ட காலம் எது?
குப்தர் காலம்.

210. உலகின் சக்திகளுக்கெல்லாம் ஊற்றாக விளங்குபவள் யார்?
அன்னை பராசக்தி.

211. தமிழர்தம் போர்த் தெய்வம் எது?
கொற்றவை.

212. இந்தியாவில் முக்கியமான சக்தி ஆலயங்கள் எவை?
மதுரை மீனாட்சி, காஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி.

213. தமிழ் புத்தாண்டு தினத்தன்று எந்தக் கோயிலின் மூலத்தானத்திற்கு நேரே மேலே சூரியன் உச்சமாய் நிற்கும்?
மதுரை மீனாட்சி அம்மன்.

214. சக்தி வழிபாடு சிறப்பாக நடைபெறும் காலம் எது?
புரட்டாதி மாதத்தில் வரும் நவராத்திரி என்ற ஒன்பது இரவுகள்.

215. விஜயதசமியன்று கோயில்களில் நிகழும் முக்கியமான திருவிழா எது?
மானம்பூ அல்லது மகிடாசுர சங்காரம்.

216. மகிடாசுர சங்காரம் என்றால் என்ன?
காட்டெருமை வடிவிலான மகிடாசுரன் என்பவன் மனிதர்களுக்கும், தேவர்களுக்கும் துன்பம் செய்து வந்தான். அவனை தேவி கொல்லுதல் மகிடாசுர சங்காரம் எனப்படும்.



RangaRakes
Tamilnavarasam.com

217: விஜயதசமியன்று கோயில்களில் மானம்பூ திருவிழா எவ்வாறு நடைபெறுகின்றது?

வன்னிமரத்தை அல்லது வாழை மரத்தை நாட்டி மகிடாசுரன் எனும் அசுரனை தேவி சங்கரித்த பாவனையில் அம்மரத்தை வெட்டித் திருவிழாச் செய்வர்.

218: மானம்பூ திருவிழா தரும் தத்துவம் என்ன?

ஆன்மாக்களைப் பிடித்துவருத்தும் ஆணவ மலம், அறியாமை, மிருகத்தன்மை முதலியவற்றை மகிடாசுரன் என உருவாக்கப்படுத்தி ஒன்பது நாளும் தேவியை வழிபட்டு பெற்ற சக்தியினால் அவற்றினை வெல்லுதல்.

## காணபத்தியம்

219. பிள்ளையாரை முழுமுதற் கடவுளாகக்கொண்டு வழிபடும் சமயம் எது?

காணபத்தியம் அல்லது காணபதம்.

220: இடையூற்றை நீக்குபவரும் எடுத்த கருமங்களை கைகூட செய்பவரும் யார்?

கணபதி.

221. எழுதத் தொடங்குவதற்கு முன் நாம் எதனை இட்டு தொடங்குவோம்?

பிள்ளையார் சுழியை.

222. ஓங்காரத்தின் சுருங்கிய வடிவம் எது?

பிள்ளையார் சுழி.

223. கணபதியினுடைய வாகனம் எது?

பெருச்சாளி.

224. காணபத்தர்களுக்கு ஆதாரமான நூல்கள் எவை?

கணபதி உபநிடதம், ஹேரம்ப உபநிடதம்.

225: கணபதி அறிவையும், பயனையும் தருவதால் அவருக்குரிய இரு சக்திகளும் யார்?

சித்தி, புத்தி.

226. ''ஓங்கார ரூபாய நம'' என்பதன் பொருள் என்ன?

ஓம் என்ற பிரணவ மந்திர வடிவினருக்கு வணக்கம்.



227. பிள்ளையாருக்குரிய பெயர்களையும் அவற்றிற்குரிய பொருளையும் எழுதுக?

(i) விக்கினேஸ்வரர் — இடையூறுகளை நீக்குபவரும், எடுத்த காரியங்களைக் கைகூடச் செய்பவரும்

(ii) ஐங்கரன் — துதிக்கையுடன் சேர்த்து ஐந்து கரங்களை உடையவர்.

(iii) கணபதி — அறிவுக்கும், வீடுபேற்றுக்கும் உரிய கடவுள் அல்லது பதினெட்டு கணங்களுக்கும் தலைவர்.

(iv) கணேசன் — மனோவாக்குகளுக்கும் அவற்றைக் கடந்த நிலைக்கும் இறைவன்.

(v) விநாயகர் — தமக்கு மேலே வேறொரு தலைவர் இல்லாத பரம்பொருள்.

(vi) வக்கிர துண்டர் — கொடிய மாயையை துண்டிப்பவர்.

228. பார்வதி, பரமேசுவரரின் மூத்தபிள்ளை யார்?

கணபதி.

## கௌமாரம்

229. குமரனை முழுமுதற் கடவுளாகக்கொண்டு வழிபடும் சமயம் எது?

கௌமாரம்.

230. தமிழர்களின் சிறப்பான கடவுள் யார்?

முருகன்.

231. ஆறுமுகனின் பிறப்புப்பற்றி விரிவாகக் கூறும் நூல் எது?

கந்தபுராணம்.

232. அப்பனுக்கு ஞானம் போதித்தமையால் முருகன் பெறும் பெயர் என்ன?

சுவாமிநாதன்.

233: முமாரக்கடவுளின் மூர்த்தங்களைக் கூறும் வடமொழி ஆகமம் எது?

குமாரதந்திரம்.



RangaRakes

Tamilnavarasam.com

## சௌரம்

234. சூரியனை வணங்குவதற்கு விஞ்ஞான முறையிலான காரணங்கள் எவை?

(1) காலையிலும் மாலையிலும் சூரியனை வணங்கும் போது நம் கண்களில் தூரப்பார்வை சீர் திருந்துகின்றது.

(2) சூரியனின் கிரகணங்கள் தீய கிருமிகளை அழிக்கும் தன்மை உடையன். சூரியனை நேரே வணங்கும்போது கிரகணங்கள் நமது உடலில்பட்டு கிருமிகளை அழிக்கின்றன.

(3) சூரியனின் இளங்கதிர்கள் உடலில்படும்போது சில உயிர்ச் சத்துக்கள் உண்டாகின்றன.

235. சூரியனை முழுமுதற் கடவுளாகக் கொள்ளும் சமயம் எது?
சௌரம்.

236. கிரேக்க நாட்டவர் ஆதித்தனை என்ன பெயரிட்டு வணங்கினர்?
அப்போலோ.

237. எக்காலத்தில் சூரியனுக்கு பெருங்கோயில்கள் இருந்தன?
குப்தர் காலத்திலும் மத்திய காலத்திலும்.

238. ஒரிசாவிலே கோனாரகத்தில் இருந்த சூரிய தேவன் கோயிலைக் கட்டியவன் யார்?
கலிங்கநாட்டரசனாக விளங்கிய நரசிம்மவர்மன்

239. பன்னிரண்டாம் நூற்றாண்டில் சூரியனார் கோயில் எங்கே கட்டப்பட்டது?
ஆவடுதுறைக்குப் பக்கத்தில்.

240. ஒன்பதாம் நூற்றாண்டில் சௌர மதத்தை நிறுவுவதற்குச் சூரிய வணக்கத்தை பிரம சொரூப வணக்கமாகக் கருதியவர் யார்?
ஆதிசங்கரர்.

241. சிவபெருமானின் மூன்று கண்களாக அமைபவை எவை?
சூரியன், சந்திரன், அக்கினி, எனும் முச்சுடர்கள்.

242. சூரியன் சிவபெருமானின் எந்தக் கண்ணாக அமைந்துள்ளது?
வலக்கண்ணாக.



243. அட்டமூர்த்தங்கள் எவை?
ஐம்பூதங்கள், இரு சுடர்கள், ஆன்மா.

244. (அ) பன்னிரண்டு இராசிகளும் எவை?
மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனு, மகரம் கும்பம், மீனம்.

(ஆ) நவக்கிரகங்கள் எவை?
ஞாயிறு, திங்கள் (சந்திரன்) செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது.

## சமய இலக்கியம்

245. தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் எது?
சோழர்காலம்.

246. எக்காலத்தில் சைவப் பேரிலக்கியங்கள் தோன்றின?
சோழப் பெருமன்னர் காலத்தில்.

247. எங்கள் இலக்கியச் செல்வத்துள் இணையில்லா சிறப்புடைய இரு புராணங்களும் எவை?
பெரியபுராணம். கந்தபுராணம்.

248. எங்கள் இலக்கியச் செல்வத்துள் அன்பால் நிறைந்த அமுதசுரபியாக விளங்குவது எது?
பெரிய புராணம்.

249. எங்கள் இலக்கியச் செல்வத்துள் அறிவால் நிறைந்த களஞ்சியமாக விளங்குவது எது?
கந்தபுராணம்.

250. திருத்தொண்டர் தொகை கூறும் மெய்யடியார்கள் எத்தனை பேர்?
63 பேர்.

251. திருத்தொண்டர் தொகையைப் பாடியவர் யார்?
சுந்தரமூர்த்தி நாயனார்.

252. பெரிய புராண நாயகன் யார்?
சுந்தரர்.



RangaRakes
Tamilnavarasam.com

253. பெரிய புராணத்தில் எத்தனை செய்யுள்கள் உண்டு?

ஏறத்தாழ 4250 செய்யுள்கள்.

254. பெரிய புராணத்தின் தொகை நூல் எது?

சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை.

255. பெரிய புராணத்தின் வகை நூல் எது?

நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி.

256. "பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட பாடிய கவிவலவ" என்று ஒரு புலவரால் பாராட்டுப் பெற்றவர் யார்?

சேக்கிழார்.

257. முருகப் பெருமானின் தோற்றமும், ஆடலும், வீரமும், அருளும், பிறவும் விரித்துக் கூறும் பெருநூல் எது?

கந்தபுராணம்.

258. கந்தபுராணத்தைப் பாடியவர் யார்?

கச்சியப்ப சிவாச்சாரியார்.

259. கந்தபுராணத்தின் முதல் அடி எது?

"திகட சக்கரம்........."

260. கந்தபுராணம் பாட அடி எடுத்துக் கொடுத்தவர் யார்?

முருகப் பெருமான்.

261. கந்தபுராணத்தின் ஆறு காண்டங்களும் எவை?

உற்பத்தி காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தட்ச காண்டம்,

262. கந்தபுராணத்தில் உள்ள விருத்தப்பாக்கள் எத்தனை?

10346.

263. புராண நன்னாயகம் என்று சிறப்பிக்கப்படும் நூல் எது?

கந்தபுராணம்.

264. "நவில் தொறும், நவில் தொறும் நூல்நயம் பயப்பது பயில் தொறும் பயில்தொறும் ஆறுமுகக் கடவுள் திருவடி பக்தி ஞானம் விளைப்பது" என் புலவர்களால் பாராட்டப்பட்ட நூல் எது?

கந்தபுராணம்.



265. "எத்துணைக் காலம் திருப்பித் திரும்பிப் படிப்பினும்,கேட்பினும் எட்டுணையும் தெவிட்டாத தித்தித்தமதூறும் அதியற்புத அதி மதுரத் திவ்விய வாக்கு" என்று கந்தபுராணத்தைப் பாராட்டியவர் யார்?

ஆறுமுகநாவலர்.

266. கயிலையில் இருக்கும்போது சுந்தரரின் பெயர் என்ன?

ஆலாலசுந்தரர்.

267. சுந்தரரின் மனைவியர் இருவரும் யார்?

பரவையார், சங்கிலியார்.

268. சுந்தரரைத் தடுத்தாட்கொள்ள வந்த இறைவனின் தோற்றத்தை வர்ணிக்க.

தளர்ந்த வயதும். சிலவாய் நரைத்த முடியும், செவியில் வடிந்த குழையும், மார்பில் புரிநூலும், தோளில் உத்தரியமும், கையிலே குடையும், தருப்பை முடிந்த மூங்கிற் கோலும் விளங்கிய அழகிய இழவடிவு.

269. கந்தபுராணம் வலியுறுத்தும் அறம் எது?

நன்றி மறத்தலால் வரும் பெருங்கேடு எல்லாவற்றையும் அழிக்கும்.

270. தக்கனின் தந்தை யார்?

பிரமதேவன்.

271. காசிபன் – மாயை இருவரினதும் பிள்ளைகள் யார்?

சூரபன்மன், சிங்கமுகன், தாரகன், அசமுகி.

272. தொடர்ந்து முருகனுடன் போர் செய்த சூரபன்மன் இறுதியாகக்கொண்ட வடிவம் எது?

நடுக்கடலிலே மாமர வடிவம்.

273. மாமரத்தை தம் வேலாயுதத்தால் முருகன் இரு கூறாக்கிய போது என்ன நடந்தது?

இரு கூறும் சேவலும், மயிலுமாக மாறியது.

274. கந்த புராணத்தின் யுத்த காண்ட இறுதி நிகழ்ச்சியின் மறை பொருள் என்ன?

ஞான சக்தியாகிய வேலின் தாக்கத்தால் ஆணவ மலம், வலுவிழந்து ஆன்மா பரம்பொருளின் திருவடிகளை அடைதல் என்பதே இதன் மறைபொருள்.



RangaRakes Tamilnavarasam.com

## சைவ நாற்பாதங்கள்

275. நாம் மனிதப் பிறவி எய்தியதன் பயன் என்ன?

இறைவன் நமக்கு கொடுத்தருளிய உடம்பு, அறிகருவிகள் உலகம், நுகர்வுப் பொருள்கள் ஆகியவற்றைக் கொண்டு இறைபணி நின்று முத்தியடைவதேயாகும்.

276. நம் புறவாழ்வையும், அகவாழ்வையும் நெறிப்படுத்தி வீடு பேற்றைத்தரும் சாதனங்கள் எவை?

சரியை, கிரியை, யோகம், ஞானம்.

278. இறைவனோடு இரண்டறக் கலத்தலாகிய முத்தியின் பெயர் என்ன?

பரமுத்தி.

277. ஆறு நாளிலே ஞானம் பெற்று பரமுத்தி அடைந்தவர் யார்?

கண்ணப்பர்.

279. சைவ சாதனங்களுள் முதலாவது படியாகக் கூறப்படுவது எது?

சரியை.

280. சரியை என்றால் என்ன?

உடம்பு சார்ந்த புறத்தொழிலால் சிவனுடைய உருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு.

281. சரியை நெறிக்குரிய வேறு பெயர் என்ன?

தாசமார்க்கம்.

282. சரியைத் தொண்டுகள் எவை?

கோயிலைக் கூட்டிச் சுத்தம் செய்தல், மெழுகுதல், பூ எடுத்தல், பூமாலை கொடுத்தல், சிவபெருமானைப் புகழ்ந்து பாடுதல், கோயிலில் விளக்கேற்றல், நந்தவனம் உண்டு பண்ணுதல், சிவனடியாரைக் கண்டால் அவர் களுக்கு வேண்டிய பணிவிடைசெய்தல் என்பனவெல்லாம் சரியைத் தொண்டுகளாகும்.

283. சரியை நெறி நிற்போர் பெறும் முத்தி எது?

சாலோபமுத்தி.

284. சரியை நெறி நின்று முத்தியடைந்த சமய குரவர் யார்?

அப்பர்.

285. கிரியை நெறிக்குரிய வேறு பெயர் என்ன?

சற்புத்திர மார்க்கம்.

286. கிரியை நெறி என்றால் என்ன?

அகத்தொழிலாலே சிவனுடைய அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு.

287. கிரியை நெறி நிற்போர் பெறும் முத்தி எது?

சாமீபமுத்தி.

288. கிரியை நெறியின் பாற்படுபவை எவை?

வாசனையுள்ள புதிய மலர்கள், தூபம், தீபம், திருமஞ் சனம், திருவமுது முதலிய பூசைப் பொருள்களை முதலிலே தேடிக்கொள்ளல், பூதசுத்தி முதலிய பஞ்ச சுத்திபண்ணல் ஆசனமிட்டு மூர்த்தியை எழுந்தருளச் செய்தல், பரஞ் சோதியைப் பாவனை பண்ணி ஆவாகித்தல், தூயபக்தி யோடு அர்ச்சனை செய்தல், துதித்து வழிபடல், விருப் போடு அக்கினி வளர்த்து ஓமம் செய்தல்.

289. சற்புத்திர மார்க்கத்துக்குரிய ஒழுக்கங்கள் எவை?

சிவலிங்க பூசைசெய்தல், திருமுறைகளை ஓதல், துதித்தல் திருவைந்தெழுத்து மந்திரத்தைச் செபித்தல், குற்ற மற்ற விரதங்களை அனுஸ்டித்தல், உண்மை பேசல், மனம், வாக்கு. காயம் ஆகிய முக்கரணங்களையும் தூய் மையாக வைத்திருத்தல், பிற உயிர்களிடத்தில் அன்பும் பரிவும் காட்டல், அன்னதானம் செய்தல், ஆன்ம சுத்தி செய்தல் போன்றவை.

290. கிரியை நெறி நின்ற நாயனார் யார்?

சம்பந்தர்.

291. கிரியை வழிபாட்டால் உயர்ந்தவர் யார்?

சண்டேஸ்வரர்.

292. ''தாதையைத் தாளற வீசிய சண்டி'' யார்?

சண்டேஸ்வரர்.

293. யோகநெறி என்றால் என்ன?

அகத்தொழிலாற் சிவனது அருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு.



RangaRakes

Tamilnavarasam.com

294. யோகம் என்னும் சொல்லின் பொருள் என்ன?
சேர்க்கை.

295. யோகநெறி நிற்பதற்கு சாதகன் பெறும் பயிற்சி எது?
அட்டாங்க யோகம்.

296. அட்டாங்க யோகங்கள் எவை?
இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி.

297. யோகத்துக்குரிய வேறு பெயர் என்ன?
சகமார்க்கம்.

298. யோக நெறி நின்ற நாயனார் யார்?
சுந்தரர்.

299. யோக நெறி நிற்போர் பெறும் முத்தி எது?
சாரூபம்,

300. யோக நெறியின் பாற்படுபவை எவை?

ஐம்பொறிகளையும் ஒடுக்குதல், சுவாசத்தை நிலையில் நிறுத்தல், மனத்தை ஒருவழிப்படுத்துதல். உடம்பிலுள்ள மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்களையும் தரிசித்தல், உயிரை அவ்வாதாரங்களுக்கு மேலே செலுத்துதல், சிரத்தின் நடுவிலுள்ள சந்திர மண்டலத்திலிருந்து ஒழுகும் அமிர்த தாரையால் உடல் முழுவதையும் நிறைத்து நிலைத்திருக்க வைத்தல், முழுச் சோதி வடிவான சிவப் பிரகாசத்தைக் கண்டு, சமாதி கூடி ஆனந்தத்தில் அழுந்தியிருத்தல் ஆகியன யோகநெறியின் பாற்படும்.

301. அட்டாங்க யோகத்தின் இறுதி அங்கம் எது?
சமாதி.

302. யோகச் சமாதி கூடுவோர் எப்படி இருப்பர்?
அட்டமா சித்திகளையும் செய்யவல்ல சித்தராய் இருப்பர்



303. அட்டமா சித்திகள் எவை?

1. அணிமா (அணுவளவாக சுருங்கும் ஆற்றல்)
2. லகிமா (கனமற்றதாகும் ஆற்றல்)
3. மகிமா (விரும்பியவாறு உருவத்தைப் பருக்கச் செய்யும் ஆற்றல்)
4. பிராத்தி (வேண்டியவற்றை அடையும் ஆற்றல்)
5. கரிமா (மிகக் கனமாயிக்கும் ஆற்றல்)
6. பிராகாமியம் (நினைத்ததை நினைத்தபடி முடிக்கும் ஆற்றல்)
7. ஈசத்துவம் (படைத்தல்போன்ற மேலான செயல் புரியும் ஆற்றல்)
8. வசித்துவம் (யாவரையும், யாவற்றையும் வசப் படுத்தும் ஆற்றல்)

304. ஞானமாவது யாது?
சிவனை அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூன்றுத் திருமேனிகளையும் கடந்து சச்சிதானந்தப் பிழம்பாய் நீக்கமற எங்கும் நிறைந்திருக்கும் திருமேனியுடையவராகக் கண்டு அறிவால் வழிபடுதல் ஆகும்.

305. ஞானத்தில் உள்ள நான்கு அங்கங்களும் எவை?
கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல்.

306. ஞான நெறிக்குரிய வேறு பெயர் என்ன?
சன்மார்க்கம்.

307. பரமுத்தியடைவதற்குரிய நேர்வழி எது?
ஞான மார்க்கம்.

308. ஞானநெறி நிற்போர் பெறும் முத்தி எது?
சாயுச்சியம்.

309. ஞான நெறி நின்ற நாயனார் யார்?
மாணிக்கவாசகர்.

310. சாயுச்சிய முத்திக்குரிய வேறு பெயர் என்ன?
பரமுத்தி.

311. சன்மார்க்கம் பற்றி திருமந்திரம் என்ன கூறுகிறது.
சற்குரு வழிபாடே சன்மார்க்கம் என்று கூறுகிறது.



RangaRakes Tamilnavarasam.com

312. ஞான நெறியில் உள்ள நான்கு அங்கங்களையும் தெளிவுபடுத்துக?

1. கேட்டல் - புராணங்களும், வேத சிவாகமங்களும், சாத்திரங்களும், வேறு பல சமய நூல்களும் ஆகிய எல்லாக் கலை ஞானங்களையும் ஆராய்தல்.

2. சிந்தித்தல் - அவ்வாறு ஆராய்ந்து பல சமயங்களிலும் கூறப்படும் பொருள்கள் பலவும் கீழானவை என்று கண்டு கழித்தல்.

3. தெளிதல் - கழித்தபின் முப்பொருள்களின் இயல்புகளையும் வகுத்துக்காட்டி பாசம், பசு இரண்டிற்கும் தலைவனாய் விளங்கும் பரமசிவனது சிறப்பியல்பை தெளிவாகக் காட்டும் சிவாகம நெறியே மேலான சித்தாந்தமெனத் தெளிதல்.

4. நிட்டை கூடல் - தெளிந்தபின் அறிபவன், அறிவு, அறியப்படும் பொருள் எனும் வேற்றுமையின்றிச் சிவத்துடன் அத்துவிதமாய் கலந்து நிற்றல்.

## அடியார் கண்ட அன்பு நெறி

313. தொண்டர் தம் பெருமை கூறுவது எது?
பெரிய புராணம்.

314. பெரிய புராணத்தின் வழிநூல் எது?
நம்பியாண்டார் நம்பியின் திருவந்தாதி.

315 பெரிய புராணத்தின் முதனூல் எது?
சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகை.

316. மாகேசுர பூசை என்றால் என்ன?
மகேசுரரின் அடியார்களுக்கு செய்யும் பூசை.

317. தமக்கென இறைவனிடம் எதுவும் வேண்டாத நாயனார் யார்?
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்.

318. செல்வத்தின் பயனை அடியார்க்கு அமுதளித்தலிலேயே செலவு செய்தவர் யார்?
இளையான்குடிமாற நாயனார்.

319. அடியார்களை வணங்குவதிலும் உபசரிப்பதிலும் உச்சங்களைக் கண்டவர் யார்?
சிறுத்தொண்டர்.



320. "அவனுடைய வழியெல்லாம் நம்பக்கல்......" என்று இறைவனால் புகழப்பட்டவர் யார்?
கண்ணப்பர்.

321. அந்தர் யாகம் என்றால் என்ன?
அக வழிபாடு.

322. மனக்கோயிலில் இறைவனை இருத்தி அர்ச்சித்து வழிபட்டவர் யார்?
வாயிலார் நாயனார்.

323. "யாமார்க்கும் குடியல்லோம்" என்று பாடியவர் யார்?
நாவுக்கரசர்.

324. பெரியபுராண அரங்கேற்றம் எவ்வாறு நடந்தது?

வீதியெல்லாம் விழாக்கோலம், மனைகள்தோறும் பூரண கும்பங்கள், திருவிளக்கேற்றியும், திருமுறை ஓதியும், ஆரவாரிக்கும் அடியார் கூட்டத்தின் மத்தியிலே எழில் வண்ண யானை திருவீதி வலம்வருகின்றது. யானையிலே சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்துடன் வீற்றிருக்கின்றார். மன்னவன் அநபாயன் பின்னிருந்து கவரி வீசிக் கொண்டிருக்கின்றான் அன்று. சிதம்பரத்திலே நிகழ்ந்த அற்புதக் காட்சி அது.

## மெய்கண்ட சந்தானம்

325. திருநந்தி தேவருக்கு வேதாகமங்களின் பொருளை உபதேசித்தவர் யார்?
ஸ்ரீ கண்ட பரமசிவன்.

326. "ஆணவத்தின் வடிவம் எவ்வாறிருக்கும்" என்று மெய்கண்டாரிடம் கேள்வி கேட்டவர் யார்?
அருணந்தி சிவாச்சாரியார்.

327. மெய்கண்டாரின் பிள்ளைத் திருநாமம் எது?
திருவெண்காடர்.

328. சகலாகம பண்டிதர் என்னும் சிறப்புப் பெயர் பெற்றவர் யார்?
அருணந்தி சிவாச்சாரியார்.



RangaRakes
Tamilnavarasam.com

329. மெய்கண்டாருடைய குல குரு யார்?
அருணந்தி சிவாச்சாரியார்.

330. மெய்கண்டாருக்கு உபதேசம் செய்த குரு யார்?
பரஞ்சோதி மாமுனிவர்.

331. மெய்கண்டார் அருணந்தி சிவாச்சாரியாரை மாணவனாக ஏற்ற போது கொடுத்த திட்சை எது?
நயன திட்சை.

332. மெய்கண்டாருக்கு அப்பெயரைச் சூட்டியவர் யார்?
பரஞ்சோதி மாமுனிவர்.

333. மெய்கண்டார் இயற்றிய சித்தாந்த நூல் எது?
சிவஞானபோதம்.

334. மெய்கண்டாரின் தலை மாணாக்கன் யார்?
அருணந்தி சிவாச்சாரியார்.

335. அருணந்தி சிவாச்சாரியார் இயற்றிய சித்தாந்த நூல்கள் எவை?
சிவஞானசித்தியார், இருபா இருபஃது.

336. எதுவித நூலும் இயற்றாத சந்தானகுரவர் யார்?
மறைஞானசம்பந்தர்.

337. மறைஞான சம்பந்தரின் மாணாக்கன் யார்?
உமாபதி சிவாச்சாரியார்.

338. 'அத்துவிதம்' என்ற சொல்லுக்கும், அறிவுநெறிக்கும், அறநெறிக்கும் பொருந்தக்கூடிய வகையில் அற்புதமான விளக்கம் தந்தவர் யார்?
மெய்கண்டார்.

339. மறைஞான சம்பந்தரின் குரு யார்?
அருணந்தி சிவாச்சாரியார்.

340. சித்தாந்த அட்டகம் என்றால் என்ன?
உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய எட்டு நூல்கள்.

341. சைவமக்கள் வளர்த்த மெய்யியற் கலையின் உச்ச வளர்ச்சி எவ்வாறு வழக்கப்படுகிறது?
சைவ சித்தாந்தம்.



342. வினையின் நீங்கி விளங்கிய அறிவினர் யார்?
இருடிகள் அல்லது முனிவர்.

343. சைவசமயத்தின் முதல் நூல்கள் எவை?
வேதமும் ஆகமமும்.

344. வேதத்தின் வழிப்படுத்தல் எது?
வைதிக சமயம்.

345. ஆகமத்தின் வழிப்படுத்தல் எது?
சைவ சமயம்.

346. சித்தாந்தம் என்பதன் பொருள் என்ன?
முடிந்த முடிபு.

347. அகச் சந்தான குரவர்கள் யார்?
திருநந்தி தேவர், சனற்குமார முனிவர், சத்தியஞான தரிசனிகள், பரஞ்சோதி முனிவர்.

348. புறச் சந்தான குரவர்கள் யார்?
மெய்கண்டதேவர், மறைஞான சம்பந்தர், அருணந்தி சிவாச்சாரியார், உமாபதி சிவாச்சாரியார்.

349. வேதாகமங்களின் மெய்ப்பொருளை யார் யாருக்கு எங்கிருந்து உபதேசித்தார்?
முன்னொரு காலத்திலே திருக்கைலாய மலையிலே ஸ்ரீ கண்டபரமசிவன் தட்சணாமூர்த்தியாகிக் கல்லால மரத்தின் கீழ் எழுந்தருளி திருநந்தி தேவருக்கு உபதேசித்தார்.

350. சித்தாந்த அட்டகத்தில் அடங்கும் நூல்கள் எவை?
திருவருட்பயன், சிவப்பிரகாசம், சங்கற்ப நிராகரணம், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம்.

351. திருக்கைலாய பரம்பரைச் சந்தான குரவர் யார்?
அகச் சந்தானகுரவர் நால்வரும், புறச்சந்தானக்குரவர் நால்வரும் சேர்ந்து இந்த எண்மருடன் உமாபதிசிவனாரிடம் உபதேசம் பெற்ற திருவாவடுதுறை, தருமபுரம் ஆகிய ஆதீனங்களின் தம்பிரான்மாரும் சேர்ந்து திருக்கைலாய பரம்பரைச் சந்தான குரவர் என அழைக்கப்படுவர்.



RangaRakes Tamilnavarasam.com

# சித்தாந்த சாத்திரங்கள்

352. "நேரேதான் இரவுபகல் கேடாவண்ணம்" எனும் பாடலின் ஆசிரியர் யார்?
தாயுமானவர்.

353. சைவசித்தாந்தக் கோட்பாட்டைச் சுருக்கமாகவும் விரிவாகவும் எடுத்துரைக்கும் நூல்கள் எவை?
சித்தாந்த சாத்திரங்கள்.

354. சைவசித்தாந்தக் கோட்பாட்டை முழுமையாக முதலில் ஆக்கித் தந்தவர் யார்?
மெய்கண்டார்.

355. சிவஞானபோதத்திற்குக் காலத்தால் முந்திய சித்தாந்த சாத்திரங்கள் எவை?
திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார்.

356. உண்மை விளக்கம் எனும் நூலின் ஆசிரியர் யார்?
மனவாசகம்கடந்தார்.

357. "வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தத் திறன்" என்றுகூறுவது எது?
சிவப்பிரகாசம்.

358. வேதத்தின் ஞானகாண்டப் பொருளை சிவாகமத்துக்கு மாறுபடாவண்ணம் உள்ளபடி எடுத்துக் கூறுபவை எவை?
தேவார, திருவாசகம்.

359. திருமுறை நூல்கள் கூறும் உண்மைகளைத் திரட்டித்தருபவை எவை?
சித்தாந்த சாத்திரங்கள்.

360. சித்தாந்தம் இலக்கணம் என்றால் இலக்கியம் எது?
பன்னிரு திருமுறைகள்.

361. சித்தாந்த சாத்திரங்களின் முதல் நூல் எது?
சிவஞானபோதம்.

362. சித்தாந்த சாத்திரங்களின் வழிநூல் எது?
சிவஞானசித்தியார்.



363. சித்தாந்த சாத்திரங்களின் சார்புநூல் எது?
திருவருட்பயன்.

364. தமிழில் ஆகமப்பொருளைக் கூறும் அரிய சாத்திர நூல் எது?
திருமந்திரம்.

365. சித்தாந்த சாத்திரங்களுள் மணிமுடியாய்த் திகழ்வது எது?
சிவஞானபோதம்.

366. சிவஞானபோதத்தில் எத்தனை இயல்கள் உண்டு?
நான்கு.

367. சைவத் திருமுறை பன்னிரண்டுக்கும் இலக்கணம் போன்று விளங்குபவை எவை?
சிவஞானபோதத்திலுள்ள பன்னிரண்டு சூத்திரங்கள்.

368. சிவஞானபோதத்தில் எப்பிரிவு முப்பொருளின் பொது சிறப்பு இயல்புகளைக் கூறுகின்றது?
இலக்கண இயல்.

369. சிவஞான முனிவர் இயற்றிய சிற்றுரையும், மாபாடியம் எனப்படும் பேருரையும் எதற்குச் சிறப்புடையதாக விளங்குகின்றன?
சிவஞானபோதத்துக்கு.

370. சிவஞானபோதத்தின் வழிநூல் எது?
சிவஞானசித்தியார்.

371. சிந்தாந்த சாத்திரங்களுள் மிக விரிவான நூல் எது?
சிவஞானசித்தியார்.

372. சிவஞானசித்தியாரின் இரு பிரிவுகளும் எவை?
பரபக்கம், சுபக்கம்.

373. சிவஞானபோதத்தின் சார்பு நூல் எது?
திருவருட்பயன்.

374. திருவருட்பயனில் எத்தனை அதிகாரங்கள் உண்டு?
பத்து அதிகாரங்கள்.

375. திருவருட்பயனின் காப்புச் செய்யுள் எது.
நற்குஞ்சரக்கன்று எனும் பாடல்.



RangaRakes Tamilnavarasam.com

376. சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கையும் எழுதி அதன் ஆசிரியர்களையும் எழுதுக.

| | | |
|---|---|---|
| சிவஞான போதம் | — | மெய்கண்டார். |
| சிவஞான சித்தியார் | — | அருணந்தி சிவாச்சாரியார். |
| இருபா இருபஃது | — | அருணந்தி சிவாச்சாரியார். |
| உண்மை விளக்கம் | — | மனவாசகம் கடந்தார். |
| சிவப்பிரகாசம் | — | உமாபதி சிவாச்சாரியார். |
| திருவருட்பயன் | — | உமாபதி சிவாச்சாரியார். |
| வினாவெண்பா | — | உமாபதி சிவாச்சாரியார். |
| போற்றிப்பஃறொடை | — | உமாபதி சிவாச்சாரியார். |
| கொடிக்கவி | — | உமாபதி சிவாச்சாரியார். |
| நெஞ்சுவிடுதூது | — | உமாபதி சிவாச்சாரியார். |
| உண்மைநெறிவிளக்கம் | — | உமாபதி சிவாச்சாரியார். |
| சங்கற்பநிராகரணம் | — | உமாபதி சிவாச்சாரியார். |
| திருவுந்தியார் | — | திருவியலூர் உய்யவந்த தேவநாயனார். |
| திருக்களிற்றுப்படியார் | — | திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார். |

377. சிவஞானபோதத்திலுள்ள நான்கு இயல்களும் எவை?
பிராமண இயல், இலக்கண இயல், சாதன இயல், பயன் இயல்.

## சைவமெய்யியல்

378. முப்பொருள்களும் எவை?
பதி, பசு, பாசம்,

379. மும்மலங்கள் எவை?
ஆணவம், கன்மம், மாயை.

380. சைவசித்தாந்தம் கூறும் இறைவனின் இரண்டு நிலைகளும் எவை;
தடத்தலக்கணம், சொரூபலக்கணம்.

381. இறைவனின் மூவகைத் திருமேனிகளும் எவை?
அருவம், உருவம், அருவுருவம்.

382. இறைவன் ஏன் சொரூப நிலையிலிருந்து தடத்த நிலைக்குப்படி இறங்கி வருகின்றார்
உயிர்களுக்கு முத்தியின்பம் கொடுப்பதற்கு.



383. இறைவனின் ஐந்தொழில்கள் எவை?
படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல்.

384. கடவுளின் படைப்புக்கு முதற்காரணம் எது?
மாயை.

385. மாயையின் இரு வகைகள் எவை?
சுத்தமாயை, அசுத்தமாயை.

386. மூவகை உயிர்களும் எவை?
சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர்.

387. பிரளயாகலர் எத்தனை மலங்களை உடையவர்?
இரண்டு மலங்களை உடையவர்.

388. ஒரு மலம் மட்டும் உடையவர் யார்?
விஞ்ஞானகலர்.

389. மூன்று மலங்களை உடையோர் யார்?
சகலர்.

390. மலத்தால் தாம் கட்டுண்டவர் என்பதை உணராதவர் யார்?
சகலர்.

391. மலத்தால் தாம் கட்டுண்டிருப்பதை உணர்பவர்கள் யார்?
பிரளயாகலர், விஞ்ஞானகலர்.

392. அசத்தைச் சாரும்போது அசத்தாகியும், சத்தைச் சாரும்போது சத்தாகியும் மாறுவதால் உயிர்பெறும் பெயர் என்ன?
சதசத்து.

393. உயிருக்கு இறைவன் ஏன் உடலைக் கொடுக்கின்றான்?
பேரின்பம் அருள்வதற்கு.

394. உயிர் முத்திபெறுவதற்கு ஏற்ற பிறவி எது?
மனிதப் பிறவி.

395. மலங்கள் அறிவித்தாலும் அறியமாட்டாதன என்பதால் அவை பெறும் பெயர் என்ன?
அசத்து அல்லது அசித்து.



RangaRakes Tamilnavarasam.com

396. மலத்துக்குரிய வேறு பெயர்கள் எவை!
பாசம், பந்தம், தளை, கட்டு.

397. மூவகை உயிர்களிலும் செம்பிற் களிம்புபோல் அநாதியாய் கலந்திருப்பது எது?
ஆணவம்.

398. ஆணவம் என்பதன் பொருள் என்ன?
அணுவின் தன்மையுடையது என்பது பொருள்.

399. உயிர்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்கெல்லாம் காரணம் எது?
ஆணவம்.

400. கன்மம் என்றால் என்ன?
வினை.

401. வினையின் இரண்டு வகைகள் எவை?
நல்வினை, தீவினை.

402. கன்மவினையின் மூன்று பிரிவுகளும் எவை?
பிராரத்துவம், ஆகாமியம், சஞ்சிதம்.

403. பின்வரும் பிறப்புக்களில் அனுபவிப்பதற்காக எஞ்சியிருக்கும் வினை எது?
சஞ்சிதம்.

404. பிராரத்துவ வினையை அனுபவிக்கும்போது புதிதாக வந்து சேரும் வினை எது.
ஆகாமியம்.

405. விடிவாமளவு விளக்குப்போன்று அமைவது எது?
மாயை.

406. உயிரில் இருந்து முதலில் அறும் மலம் எது?
மாயை.

407. உயிரில் இருந்து இறுதியாக அறும் மலம எது?
ஆணவம்.

408. ஆணவ மலம் எதனால் ஒழிக்கப்படுகிறது?
இறைவனுடைய ஞானசக்தியால்.



409. கிரியாசக்தியால் ஒழிக்கப்படுவது எது?
சஞ்சிதகன்மம்.

410. அனுபவித்தே ஒழிக்கவேண்டிய கன்மம் எது?
பிராரத்துவ கன்மம்.

411. மலங்கள் அறுவதற்கு உயிர் பின்பற்றவேண்டிய மார்க்கங்கள் எவை?
சரியை, கிரியை, யோகம், ஞானம்.

412. மனிதப்பிறவி எடுத்த உயிர் மேற்கொள்ளவேண்டிய ஒழுக்கம் எது?
இறைபணி நிற்றல்.

413. முத்தி என்பதன் பொருள் என்ன?
விடுதலை.

414. சிவலிங்கம் எத்தனை வகைப்படும்?
பரார்த்தலிங்கம், இட்டலிங்கம், என இருவகைப்படும்.

415. நான்கு புருடார்த்தங்களும் எவை?
அறம், பொருள், இன்பம், வீடு.

416. சற்காரிய வாதம் என்றால் என்ன?
உள்ளது இல்லதாகாது. இல்லது உள்ளதாகாது. உள்ளதில் இருந்தே உள்ளது தோன்றும். இல்லதில் இருந்து உள்ளது தோன்றமாட்டாது.

417. முப்பொருட்களும் எவை? அவற்றின் வேறுபாட்டை விளக்குக?
பதி, பசு, பாசம் என்னும் மூன்றும் முப்பொருட்கள். பதி அறிவிக்காமலே அறியும் பொருள். எனவே அது சத்து எனப்படும். பாசம் அறிவித்தாலும் அறியாமட்டாதது. எனவே அது அசத்து எனப்படும் பசு அறிவித்தால் அறிந்து அறிவிக்காவிட்டால் அறியமாட்டாது. எனவே அது சதசத்து எனப்படும். பசு அசத்தைச் சாரும் போது அசத்தின் குணத்தையும், சத்தைச் சாரும் போது சத்தின் குணத்தையும் உடையதாக மாறுவதால் அது சதசத்து எனப் பெயர்பெற்றது.

418. தனு, கரண, புவன போகங்கள் என்றால் என்ன?
தனு என்பது உயிர்களுக்கு நிலைக்கடனான உடம்பு. கரணம் என்பது உணர்வதற்கு வேண்டிய கருவி. புவனம் என்பது வாழ்க்கையை நடத்துவதற்கான இடம். போகம் என்பது நுகர்ச்சிக்கு வேண்டிய பொருட்கள்.



RangaRakes
Tamilnavarasam.com

419. தடத்தலக்கணம் என்றால் என்ன?

தடத்தலக்கணம் என்பதற்கு இறைவனின் பொதுவியல்பு என்னும் பொருள் உண்டு. சொரூபலக்கணத்தையுடைய இறைவன் உயிர்களுடைய துன்பங்களைப் போக்கி அவற்றுக்கு அருள் செய்வதற்காக இரக்கம் கொண்டு தானாகவே பல படிகள் இறங்கிவந்து பல நிலையிலுள்ள கடவுளரை அதிட்டித்து நின்று அவர்கள் மூலமாக ஆணை செலுத்திப் படைத்தல் முதலிய தொழில்களைச் செய்கின்றது. தடத்த நிலையில் சிவத்தோடு பிரிவின்றி நிற்கும் சிவசக்தி முதன்மை பெற்றுவிளங்கும். உயிர்களின் பொருட்டுப் படியிறங்கிவந்து தொழில் புரியும் தடத்த நிலையில் பரமசிவன் என ஆண் பெயர் கொண்டு அழைக்கப்படும் அவனுடைய சக்தி பராசக்தி என்று பெண் பெயர் கொண்டு அழைக்கப்படும்.

420. சொரூபலக்கணம் என்றால் என்ன?

சொரூபலக்கணம் என்பதற்கு இறைவனின் சிறப்பியல்பு என்னும் பொருள் உண்டு. சொரூபலக்கணம் என்பது கடவுளின் உண்மைத்தன்மையைக் காண்பிப்பது. இந்த நிலையிலுள்ள கடவுளுக்கும் பெயர், குணம், குறி முதலியனஒன்றும் இல்லை. வாக்கு, மனம், காயம் ஆகிய மூன்றாலும் அறியப்படாத அனாதி முத்த சித்தாயிருக்கும் இந்த நிலையில் உள்ள கடவுளை சித்தாந்திகள் பரமசிவம் என்றும் சிவம் என்றும் குறிப்பிடுவர்.

421. ஐந்தொழில்கள் எவ்வாறு செய்யப்படுகின்றன என்பதை ஒவ்வொன்றையும் பற்றி எழுதி விளக்குக?

படைத்தல் — சூக்கும நிலையில் இருந்ததைத் தூல நிலைக்குக் கொண்டு வருதல்.

காத்தல் — தோன்றிய உலகங்களையும் உடம்பெடுத்த உயிர்களையும் உரிய காலத்தில் உரிய கால எல்லை வரை காப்பாற்றி கன்ம நுகர்ச்சிக்குத் துணைசெய்தல்

அழித்தல் — பல பிறவிகளில் பிறந்திறந்து உழலும் உயிர்களை இளைப்பாறவைத்தல்.

மறைத்தல் — இருவினையொப்பு வருவித்து மலங்களை முதிர்விக்கும் அருட்செயல்.

அருளல் — உயிர்களின் பக்குவ நிலையில் அவற்றின் மல பந்தத்தைத் ஒலித்து வீடு பேறு எனும் முத்தியை அருளுதல்.



422. பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவம் எனும் ஐவருடைய சக்திகளும் யார்?

பிரமா — சரஸ்வதி, விஷ்ணு — இலட்சுமி, உருத்திரன் — உமை, மகேசுரன் — மகேசுவரி, சதாசிவம் — மனோன்மணி

423. மூவகை கன்மங்களின் வேறுபாடுளையும் எழுதுக.

பிராரத்தம் — முற்பிறப்புக்களில் உயிர் செய்த வினைத் தொகுதியில் இப்பிறப்பில் அனுபவிக்கின்ற ஒரு பகுதி வினை.

சஞ்சிதம் — அனுபவிக்கப்படாமல் பின்வரும் பிறப்புக்களில் அனுபவிப்பதன்பொருட்டு எஞ்சியிருக்கும் பழவினை.

ஆகாமியம் — பிராரத்த வினையை இப்பிறப்பில் அனுபவிக்கும்போது புதிதாகச் சேரும் வினை.

424. இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் என்பவற்றை விளக்குக.

இருவினையொப்ப — நல்வினை தீவினை இரண்டிலும் அவற்றின் பயன்களிலும் விருப்பு, வெறுப்பின்றி இரண்டையும் ஒரே தன்மையாக எண்ணுதல்.

மலபரிபாகம் — மலம் தனது சக்தி தேய்வதற்குரிய நிலையை எய்துதல் ஆணவமலம் வலிகெடுதல்.

சத்தி நிபாதம் — உயிரின்கண் இறைவனது திருவருட் சக்தி படிந்து, உயிரைத் தன்வயப்படுத்தி நிற்றல்.

425. மூவகை வழிபாடும் எவை?

குருவழிபாடு, இலிங்கவழிபாடு, சங்கமவழிபாடு.

426. மூவகை சரீரங்கள் எவை?

தூல சரீரம், சூக்கும சரீரம், காரண சரீரம்.

427. படிமுறையின்படி சிவதீட்சையின் வகைகள் எவை?

சமய தீட்சை, விசேட தீட்சை, நிருவாண தீட்சை.

428. சைவ சாதனங்கள் எவை?

விபூதி, உருத்திராக்கம், திருவைந்தெழுத்து.



RangaRakes Tamilnavarasam.com